22nd November 1963]

பாலத்திற்கு 'டோல் கேட்டு' அமைத்து வரி வசூல் செய்ததை நிறுத்தி விடவேண்டுமென்று மதுரை நகரசபை ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பி உள்ளது. அதற்கு இணங்க அந்த வரி வசூல் செய்வது நிறுத்தப்பட்டது. அது போலவே திருபுவனத்திற்கு அருகில் உள்ள பாலத்திற்கும், நம் மாநிலத்தில் உள்ள மற்ற இதர பாலங்களுக்கும் 'டோல் கேட்டு' அமைத்து வரி வசூலிப்பதை அரசாங்கம் நிறுத்த உத்தரவு செய்யுமா?

கனம் திரு. வெ. ராமையா : மூலக் கேள்வி திருபுவனம் பாலத்தைப் பொறுத்தது. அதைப்பற்றி விவரம் கேட்டு இருக்கிறார்கள். அதைப்போல் ஒரு கோரிக்கை வரவில்லை என்று நான் சொன்னேன். தெரிந்துதான் பதில் சொல்லி இருக்கிறேன். மேலும் ஏதாவது விவரம் வேண்டுமென்றால் கனம் அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பினால் அது பரிசிலனை செய்யப்படும்.

வெள்ளைக் களிமண் (செங்கம் தாலுக்கா)

* 432 கேள்வி.—திரு. ஆர். ஜீவரத்தினம் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா செங்கம் தாலுகா தென்முடியனூர் கிராமத்தில் வெள்ளைக் களிமண் கிடைப்பதாகச் சர்க்காருக்குத் தகவல் வந்திருக்கிறதா ?

(இ) அப்படியானால் அந்தத் தகவல் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) வினா எழாது.

Arts Colleges

* 433 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of Arts Colleges permitted to be opened during the current year under private management; and

(*b*) the total number of seats for P.U.C. available in all the colleges at the beginning of the educational year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The University has granted affiliation to four new colleges opened under private management with Pre-University Course.

(*b*) 27,813.

(அ) தனியார் நிர்வாகத்தின்கீழ் பி.யு.சி. வகுப்புடன் திறக்கப்பட்ட நான்கு புதிய கல்லூரிகளுக்குப் பல்கலைக் கழகம் அனுமதியளித்துள்ளது.

(இ) 27,813.